17.07.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 257/2014

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜா | | |
| த/பெ | தர்மலிங்க முதலியார் | மதம் | |
| கிராமம் | டி.ஆண்டிப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 42/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் டி.ஆண்டிப்பாளையத்தில் வசித்து வருகிறேன். தற்போது திருபுவனை உள்ள வேர்ல்புல் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பாலையா என்பவரை தெரியும். அவர் எனக்கு சித்தப்பா முறை ஆகும். எதிரி தமிழ்வாணன் மற்றும் சாந்தராஜ் ஆகியோரை எனக்கு தெரியும். அ.சா.1 யுவராஜ், அ.சா.2 வசந்தகுமாரி ஆகியோர்களை தெரியும். கடந்த 9.9.2009 தேதி இரவு சுமார் 9-9.30 மணியளவில் தள்ளாக்குளம் அருகில் அடிபட்டு இறந்துகிடப்பதாக நானும், அ.சா.2 வசந்தகுமாரி மற்றும் சிலரும் சென்று பார்த்தோம். அப்போது பாலையா வெட்டுக்காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தார். அவருக்கு வெட்டுக்காயங்கள் எவ்வாறு வந்தது என்றும், அதை யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். என்னிடம் காட்டப்படும் 164கு.வி.மு.ச வானூர் நீதித்துறை நடுவர்- மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களிடம் சாட்சியம் சொல்ல சென்றோம். ஆனால் சொன்னோமா என்று எனக்கு ஞாபகம் இல்லை. கையொப்பம் என்னிடம் வாங்கினார்கள்.

அது ஞாபகம் உள்ளது. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னால் இடப்பட்டவை ஆகும். (சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

## அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 09.09.2009 தேதி இரவு நானும் என்னுடைய நண்பர் ஆறுமுகம் என்பவரும் ஆறுமுகம் என்பவருடைய மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்துக்கொண்டு கண்டமங்கலம் வந்து ஊருக்கு திரும்ப போகும் போது இரவு சுமார் 10மணியளவில் சோரப்பட்டு-டி.ஆண்டிப்பாளையம் ரோட்டில் பூரணச்சந்திரன் கரும்புக்கொல்லைக்கு எதிரில் மெயின்ரோட்டில் எங்கள் ஊரை சேர்ந்த பாலையா என்பவரை வழி மறித்து கீழே தள்ளி எதிரி 2 சாத்தராஜ் என்பவர் தான் வைத்திருந்த நீண்ட வெட்டுக்கத்தியால் பாலையாவின் இடது பக்க தாவாக்கட்டையிலும், கழுத்திலும், இடது பக்க காதிலும் மாறிமாறி வெட்டினார் என்றும், 1வது எதிரி தமிழ் என்ற தமிழ்வாணன் மடக்கு வெட்டுக்கத்தியால் பாலையாவின் குரல்வளையை குத்தி அறுத்தார் என்றும், 5ம் எதிரி பாலமுருகன் தான் வைத்திருந்த நீண்ட நுனி வளைந்த வெட்டுக்கத்தியால் பாலையாவின் இடது கை முட்டியிலும் , தோள் பட்டையிலும் மாறிமாறி வெட்டினார் என்றும், 3ம் எதிரி பிரேம்குமார் இரும்பு பைப்பால் தலையில் அடித்தார் என்றும், 6ம் எதிரி மணிபாலன் தடியால் இடது உள்ளங்கை, வயிறு, வலது கை ஆகிய இடங்களில் அடித்தார் என்றும், உடனிருந்த சின்னபாபுசமுத்திரத்தை சேர்ந்த அறிவழகன், கண்டமங்கலத்தை சேர்ந்த அருள் ஆகியோர் மேற்படி எதிரிகளுக்கு துணையாக இருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நானும், ஆறுமுகம் என்பவரும் மோட்டார் சைக்கிள் வெளிச்சத்தில் பார்த்தோம் என்றும், தமிழ்வாணன் எங்களை பார்த்து அவர் வைத்திருந்த கத்தியை காட்டி இந்த கொலையை வெளியே சொன்னால் உங்களுக்கும் இந்த கதி தான் என்று மிரட்டினார் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. கடந்த 23.11.2009 தேதி வானூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிபதி அவர்களின் முன்னிலையில் ஆஜராகி மேற்படி சங்கதிகளை கூறிவிட்டு, இது

குறித்து போலீஸ் விசாரணையிலும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்றும் நோக்கத்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**- இல்லை